

# கிறிஸ்தவ கீர்த்தனை அன்றும், இன்றும்

கிறிஸ்தவ இலக்கிய சங்கம் கடந்த 145 ஆண்டுகளாக இன்று நம்மிடமுள்ள கீர்த்தனை புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டு வருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இன்றைய C.S.I. பதிப்பில் 335 கீர்த்தனைகளே உள்ளன. பல கீர்த்தனைகள் நீக்கப்பட்டவை எனக்கு வருத்தமே. மிக வருத்தம் யாதெனில் இந்த 335 கீர்த்தனைகளில் பலராலும் வருத்தமே மிக வருத்தம் யாதெனில் இந்த 335 கீர்த்தனைகளில் பலராலும் பெரிதும் பயன்படுத்தப்படுபவை 50-60க்கும் குறைவே. இவை மட்டுமே மிஞ்சும் நிலை வரலாம் என்ற அச்சமாகும். மேலும் திருப்பத்தூர் பெரியண்ணனின் ‘‘ஆசிரம பாமாலையில்’’ அரிய ராகங்களும் உயரிய கருத்துகளும் கொண்ட கீர்த்தனைகளும் பயன்படுத்தபடாமல் அழிந்து கொண்டிருப்பது கிறிஸ்தவ கவிஞர்களின் பெரும் வேதனையாகும்.

**இதற்கான காரணங்கள் :** 1 தமிழிசையில் இராகம், தாளம், பல்லவி, அனுபல்லவி, சரணங்கள், சுரம் சிட்டாசுரம் முதலியன கற்பது கடினம், 2. கற்றக் கிறிஸ்தவர் வெகுசிலரேயானதால் கற்பிப்பாரில்லாமை, 3. தமிழிசைக் கருவிகள் (வீணை, தம்புரா, வயலின், மோர்சிங், புல்லாங்குழல், ஆர்மோனியம், கஞ்சுரா, கடம், மிருதங்கம், தபேலா) இல்லாமை, 4. முன்னாள் தமிழறிஞர்களால் எழுதப்பட்டு, பாடப்பட்ட கிறிஸ்தவக் கீர்த்தனைகளின் சொல்விளக்கம், கருத்தாழம் இசை நுணுக்கம், இவற்றின் பிறப்பிடமான திருமறைத்தெளிவு, வாழ்வில் கையாண்ட பக்தி, உணர்வு, இந்நாள் கிறிஸ்தவர்க்கு விளங்காமை, 5.புதுப்பாடல்களின் (எளிய மொழிநடை சுலப இசை) பெருக்கம், 6.வாலிபத்தின் மேலை நாட்டு இசை, இசைக் கருவிகளின் மோகம் ஆக இன்னும் பல கூறலாம்.

இன்றும் சிலர் தமிழிசை ஆர்வமும் தமிழிசைக் கருவிகள் கற்பதில் நாட்டம் கொண்டு, கிறிஸ்தவக் கீர்த்தனைகளைப் பயன்படுத்துவது பெரிதும் மகிழ்ச்சியே. சென்னைப் பேராயம் தமிழிசைக்கு சிறப்பிடம் தந்து தமிழ் இலக்கியத்துறை அமைத்து அதன் மூலம் முத்தமிழ் மத்தியிலிருந்து முதலிடம் வந்துள்ளது தமிழிசை. கீர்த்தனைகள் பெரிதும்

பயன்படுத்தப்படாமைக்கு முக்கியக் காரணம் அவற்றின் சிறப்புகளை முழுமையாய் அறியாமையாகும். இவற்றுள் 1.கிறிஸ்தவக் கவிஞர்களை, அவர்களின் வாழ்க்கையை அறியாமை, 2.பல கீர்த்தனைகள் எழுந்த சூழல்களை அறிந்துணராமை, 3. கீர்த்தனைகளின் பக்தி உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமை, 4. கீர்த்தனைகளில் உணர்ததப்படும் திருமறைப் பகுதிகளை தெரிந்து மகிழாமை, 5. கீர்த்தனைகளில் ஆழ்ந்து கிடக்கும் வாழ்வியல், இறையியல் ஆகியவற்றை காணாமல் ஒதுக்கிவிடுதல் ஆகியவையாகும்.

மேற்கூறிய குறைபாடுகளை நீக்க கிறிஸ்தவக் கீர்த்தனைகளிலுள்ள பெரும்புதையலை தோண்டி எடுக்க வேண்டும்.

**இறையிசை**

இறைவன் நம்மோடு பேசுவது திருமறை மூலம் (Word of god). நாம் இறைவனோடு பேசுவது ஜெபம். நாம் ஜெபத்தை மனதளவிலும் சொல்லளவிலும், பாடலாகவும் ஏறெடுக்கலாம். கிறிஸ்தவ நிகழ்வுகள் எதுவாயினும் முதலில் பாடல், பின் திருமறை, இறுதியில் ஜெபம் செய்வது வழக்கம். எனவே பாடலில்லா நிகழ்வுகளே இல்லை எனலாம். தொழுகையில் பயன்படுத்தப்பட்ட பாடல்கள் 1.சால்மோஸ் (கடவுள் துதிக்கு) 2.ஹிம்னோஸ் (தோத்திரத்திற்கு), 3.ஓடே (புதுப்பாட்டு) என மூவகைப்படும்.

தமிழிசையில் தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாடல்களும், சைவ வைணவ அடியார்களின் பாடல்களும் வள்ளலார், அருணகிரி போன்றோரின் சமய பாடல்களுக்கு பிந்தியதே கிறிஸ்தவ தமிழ் கீர்த்தனைகள் என்றாலும் தரத்திலும், திறனிலும், யாப்பின் சிறப்பிலும், கிறிஸ்து நெறிக்குட்பட்டும் எழுந்தவையாகும். பெரியபுராணம், கம்பராமாயணத்திற்கொப்ப இரட்சண்ய யாத்திரீகம், தேம்பாவணி, பெத்லேகம் குறவஞ்சி போன்ற பேரிலக்கியங்கள் படைக்கப்பட்டன. இதற்கு காரணம் கிறிஸ்தவ இலக்கிய கர்த்தாக்கள் பெரும்பாலும் சைவ, வைணவத்திலிருந்து கிறிஸ்தவரானவர்கள், ஏனைய கவிஞர்களும் யாப்பிலக்கணத்துடன் மோனை, எதுகை, தொடை பா வகைகளுடன் கற்பனை, உணர்ச்சி ஒலி நயம் பல்வகை அணி வகைகளுடனும் உவமை வகைகளுடனும் ராகம் தாளத்துடன் படைத்துள்ள கீர்த்தனைகள் கிறிஸ்தவரின் சிறப்பாகும்.

உணர்வை வெளிப்படுத்த ஒலி சிறந்தது. சொற்களே இல்லாமல் ‘உம், ஊகுடம்’ ‘‘ஊக்கும்’’ என ஒலி மூலமே நம்முணர்வை பிறர்க்கு தெரிவிப்பது இயல்பான தொன்றே. மூன்று மாத குழந்தையும் தன்னுணர்வை அழுகுரல் சிரிப்பொலி மூலம் வெளிப்படுத்துகிறது. பசிக்கொரு ஒலி தூக்கத்திற்கொரு

ஒலி, அதனை பெற்ற தாய் புரிந்து தனக்குத் தெரிந்த தாலாட்டைப் (ஆரீராரோ, லலலலா, ரீரீரீற) பாட, அதுதான் தன் தாய் தனக்குப் பாடும் பாடலென ஒரு சிசுவாலும் புரிந்து கொள்ள முடிகிறது. நாய் குரைத்தலில் மகிழ்ச்சி, கோபம், வலி முதலியனவற்றை வெளிப்படுத்துகிறது. பாம்பும் பசுவும் இசைக்கு மயங்குகிறது. குழலூதும் கண்ணன் என்பது ஆடுகளை அழைக்கும் இசை. தாவிதும், பத்து நரம்பு வீணையில் தன் ஆடுகளைக் கவர்ந்தார். இப்படி ஒலி உணர்வுடன் ஒன்றி உறவாடுவது உண்மை. சொற்களும் உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்தும். சொற்களால் பாட்டெழுதி அதற்கு இசையும் கூட்டினால் உணர்வு மிகவும் தெளிவாகும். பாட்டு இருவகைப்படும், ஒன்று கீர்த்தனை, மற்றவை அனைத்தும் பாடல்கள், இதில் பாட்டு கீர்த்தனையைவிட எளிதானது. எழுதுவதும், பாடுவதும் பாடலை கற்பிப்பதும் அவற்றிக்கு இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதும் எளிதாகும. கிராமிய பாட்டுகள், கும்மிப்பாட்டு, கோலாட்டப்பாட்டு, அம்மிப்பாட்டு, ஏற்றப்பாட்டு, கூத்துப்பாட்டு, சாவுப்பாட்டு, மற்றும் நாட்டுப்பாடல், சமூகப்பாடல் வாழ்க்கையோடு ஒன்றிபோகும் பாடல்களாகும்.

எழுப்புதல் பாட்டு, புத்தெழுச்சிப்பாட்டு, ஆவியின் பாட்டு, அனல் பரக்கும் பாட்டு என பக்திப்பாட்டு பலவகைப்படும். இவையனைத்தும் இன்று பலராலும் பரவலாகப் பயன்படுத்தப்படுவது, உண்மையே. ஆனால் கீர்த்தனைகள் எழுதுவதும் (யாப்பிலக்கணத்துடன் அசை, சீர், தளை, அடி, தொடை, மாத்திரை ஆகிய ஒலி தத்துவம், சந்தம் மற்றும் பா வகையுடன்) எழுவதும் கடினம். இசைக்குத் தாயாகும் சுருதியுடன் சுரம் அமைத்து, இராகம் தாளத்துடன் இசைக்கருவிகளுடன் பாடுவதும் மிகக்கடினம்.

இராகங்கள் பாடலின் கருத்திற்கேற்ப அமைய வேண்டும் நாகத்தை மயக்கி நடனமாடவைக்க புன்னாகவராளி இராகம் பயன்படுத்தப்படுகிறது. இதே ராகத்தில் ‘‘எங்கே சுமந்து போகிறீர்’’ ‘‘நெஞ்சமே நீ கலங்காதே’’ ‘‘ஓடிவா ஜனமே’’ என்கிற கீர்த்தனைகள் அமைந்துள்ளமை, உணர்விற்கு உணர்ச்சி சேர்க்கும் வகையில் உள்ளது. பாவ அறிக்கைக்கென முகாரி இராகத்தில், ‘‘ஐயையா நான் பாவி’’ ‘‘நித்தியக் கன்மலை எனக்காய்’’ போன்ற கீர்த்தனைகளும், பக்தி வேண்டி பாட குந்தளவராளி இராகத்தில் ‘‘தெய்வன்பின் வெள்ளமே’’ கீர்த்தனையும், துன்ப சூழ்நிலைக்கு நீலாம்பரி இராகத்தில் ‘‘சரணம் சரணம் அனந்தா’’ மகிழ்ந்துபாட கேதார இராகத்தில் ‘‘யூத ராஜ சிங்கம்’’ கீர்த்தனையும், ஆனந்தபைரவியில் ‘‘இம்மட்டும் ஜீவன் தந்த’’ ‘‘ஆத்துமமே என் முழு உள்ளமே’’ கீர்த்தனையும், இறை நம்பிக்கைக்கு காம்போதியில் ‘‘தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ’’, காலையில் பாட பூபாளத்தில் ‘‘கதிரவன் எழுகின்ற காலையில்’’, நெஞ்சை உருட்டும்

செஞ்சுருட்டியில் ‘‘வேத புத்தகமே வேதப்புத்தகமே’’ மற்றும் பலராகங்களில், தாளங்களின் வேறுபாட்டிற்கொப்பவும், மற்றும் பல பல ராகங்களில் எல்லா கீர்த்தனைகளும் அமைந்துள்ளன. இவற்றை பாடுவது கடினம் என ஒதுக்கி தற்கால எழுப்புதல் பாடல்களைப் பாடுவது எளிதாயிற்று. கல், மண், மரம், மழை தண்ணீர், நெருப்பு, சூரிய ஒளி முதலியன எளிதிற் கிடைப்பன. அதிக உழைப்பின்றி மனிதர்க்குக் கிடைக்கும். ஆயினும் நிலக்கிரி, செம்பு, இரும்பு, வெள்ளி, பொன், வைரம் போன்ற உலோகங்கள் ஆழங்களில் உள்ளதால், மனிதரின் அதிக உழைப்பினால் அன்றி பெற இயலாது. அவ்வாறே கீர்த்தனைகள் முழுவதையும் கற்பதும், கற்பிப்பதும், மிக மிக கடினமாயிருப்பதால் புதைந்திருப்பவற்றை ஆழத் தோண்டி எடுக்க கோவை கீர்த்தனையின் மகிமை அறக்கட்டளை உதவ வேண்டும். இந்நூலுக்கு **கீர்த்தனைப் புதையல்** எனப்பெயரிடப்பட்டுள்ளது. இதில் தோண்டி எடுக்கப்பட வேண்டியப் புதையல்கள். 1. கீர்த்தனை கவிஞர்களின் தமிழறிவும், இசைதிறனும் வாழ்க்கைத்தரமும், திருமறைத்தெளிவும், பக்தியின் ஆழமும் ஒரு பகுதியாகும். 2.கீர்த்தனைகளை பாடுவோரின் தனிப்பட்ட குடும்ப சமூக, திருச்சபை வாழ்விற்கு பயன்படும் பாங்கு 3.ஆலய வழிபாடுகளுக்கும், ஏனைய சிறப்பு நிகழ்வுகளில் பிறப்பு, இறப்பு, ஞானஸ்நானம், திடப்படுத்தல், திருவிருந்து, திருமணம், ஆலய பிரதிஷ்டை, காணிக்கை, இறைதுதி, நன்றியுணர்வு, பயணம் காலை, மாலை, இரவு நேரம் பாடக்கூடிய கீர்த்தனைகள், என பல்வேறு சூழ்நிலைக்கும் உள்ள கீர்த்தனைகளை ஓரளவாவது விளங்க வைக்கும் முயற்சி தேவை.

இம்முயற்சியினுடே கீர்த்தனை கவிஞர்களின் காலம், பிறப்பிடம் பணியிடம் இலக்கிய பணிகள் அடங்கிய ஆசிரியர் குறிப்பிலும், பாடும் ஒத்த ராகங்களை மெட்டு குறிப்பிலும் பாடல் எழுந்த சூழலும், பாடற்குறிப்பும் முடிந்தவரை பதவுரையும் பொழிப்புரையும் ஆங்காங்கு திருமறைச் சான்றுகளும் விளக்கிட வேண்டும்.

மீண்டும் உங்கள் அறக்கட்டளையின்
எதிர்காலப் பணிகளுக்கு ஜெபிக்கும்

**அருள்திரு. லாசரஸ் செல்வநாதன்**